<u>குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்</u>
<u>முன்னிலை : திரு.எம்.லியாகத்</u>

<u>ந.க.அ4/4755/ 2017</u>

<u>நாள்:11.10.2018</u>

<u>பொருள்:</u> **கிராம நிருவாகம்**: தகுதி காண் பருவம் : குளித்தலை கோட்டம் - குளித்தலை வட்டம் - நங்கவரம் தெற்கு 1 கிராமம் - கிராம நிர்வாக அலுவலர் வெங்கடேசன் (திரு) இ என்பவர் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் இரண்டு ஆண்டுகள் பணியினை நிறைவு செய்தல் – தகுதிகாண் பருவம் விளம்பி ஆணையிடல்.

படிக்கப்பட்டவை

1. தனியரின் பணிப்பதிவேடு
2. கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் நகஅ3/7209/2012 நாள் 28.02.2014
3. குளித்தலை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள் நகஅ4/1996/2014 நாள் 03.06.2014
4. அரசாணை (3D) எண் 08 வருவாய் பணி 9(3) துறை நாள் 24.01.2017
5. குளித்தலை வருவாய் வட்டாட்சியரின் கடிதம் ந.க.அ3/4639/2018 நாள்: 16.08.2018.
6. அரசு கடித எண் 36150/ பணி 7(1) / 2017-2. நாள்: 22.11.2017.
7. முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் கடித எண் பணி 5(1) - 17494/2017 நாள் 12.02.2018

********

**<u>ஆணை:</u>**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நங்கவரம் தெற்கு 1 கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.கி.வெங்கடேசன் என்பவர் கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 04.06.2014 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். இவரது பணி பார்வை 4ல் காணும் அரசாணை பேரில் பார்வை 2 ல் காணும் குளித்தலை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகளின்படி கிராம நிர்வாக அலுவலர் இனத்தில் 04.06.2014 முற்பகல் முதல் தனியரது பணி கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

தகுதி காண் பருவ காலத்தில் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகளில் தனியர் கீழ்கண்டவாறு தேர்ச்சி பெற்றுள்ளார்.

| வ.எ | தேர்வுகள் விபரம் | தேர்வு நாள் | தேர்ச்சி விபரம் |
|---|---|---|---|
| 1. | கிராம நிர்வாக அலுவலரின் அதிகாரங்களும் கடமைகளும் | 09.09.2016 | தேர்ச்சி |
| 2. | கிராம சுகாதாரம் | 19.02.2015 | தேர்ச்சி |
| 3. | கிராமக் கணக்குகள் நடைமுறை நூல் | 19.02.2015 | தேர்ச்சி |
| 4. | கிராம நிர்வாக அலுவலர் நிர்வாக பயிற்சி | 12.07.2017 முதல் 22.08.2017 வரை | தேர்ச்சி |
| 5. | நில அளவைப் பயிற்சி ( காலம் முடிய) | 18.04.2018 முதல் 17.05.2018 வரை | தேர்ச்சி |

தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் முடிக்க வேண்டிய தேர்வுகளில் ஒன்றான நில அளவைப் பயிற்சித்தேர்வினை 17.05.2018 அன்று நிறைவு செய்துள்ளார். மற்றபடி பிற தேர்வுகளை அதற்கு முன்பே நிறைவு செய்துள்ளார்

பார்வை 7ல் காணும் முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களது கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தனியர் 5 ஆண்டுகளுக்குள் தகுதிகாண் பருவத்திற்கான தகுதிகளான கிராம நிர்வாக அலுவலருக்கான தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் அனைத்தும் நிறைவு செய்துள்ளதால் கிராம நிர்வாக அலுவலர் திரு.இ.வெங்கடேசன் என்பவரது இயல்பான தகுதிகாண் பருவ காலத்தினை நீட்டித்து மற்றும் ஐந்து வருட காலத்திற்குள் தகுதிகாண் பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற நாளினை அடிப்படையாகக் கொண்டு 17.05.2018 பிற்பகல் தனியர் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ததாக விளம்பி ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இணைப்பு தனியரின் பணிப்பதிவேடு**

11/10/18

**வருவாய் கோட்டாட்சியர்,**
**குளித்தலை.** 7/10

**பெறுநர்**

திரு.இ.வெங்கடேசன்
கிராம நிர்வாக அலுவலர்,
நங்கவரம் தெற்கு 1 கிராமம்,
குளித்தலை

11.10.18

**நகல்**

வட்டாட்சியர்,
குளித்தலை.

சம்பந்தப்பட்ட நபருக்கு சார்வு செய்திடும்பொருட்டு

நகல் பெற்றுக்கொண்டேன்